மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, முதலிபாளையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகள் காத்திருக்க போதிய இட வசதியும் உள்ளது. எனினும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, எதிர்வரும் காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் காத்திருப்போர் அறை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

கம்பிவட ஊர்தி வசதி

***61448—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, திருநீர்மலை அருள்மிகு நீர்வண்ணப் பெருமாள் திருக்கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநீர்மலை அருள்மிகு ரங்கநாதப் பெருமாள் திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் 61–வது திவ்ய தேசமாகக் கருதப்படுகிறது. 180 படிகளைக் கொண்ட இத்திருக்கோயிலின் படிகளில் ஏறி வயது முதிர்ந்தோர், உடல் நலம் குன்றியோர் உள்ளிட்டோர் சுவாமி தரிசனம் செய்வதற்குக்

கடினமாக இருக்கின்ற சூழ்நிலையைக் கருதி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் இத்திருக்கோயிலுக்கு rope car *அமைப்பதற்கு வலியுறுத்தி, அறிவிப்பை வெளியிடச் செய்தார்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *அதன் தொடர்ச்சியாக சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, ரூபாய் 8 கோடியே 17 இலட்சம் செலவில் கருத்துரு தயாரிக்கப்பட்டு, அதற்குண்டான அடிப்படை தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுகின்ற வகையில் வெகு விரைவில்* tender *கோரப்பட்டு, அந்த* rope car *அமைக்கின்ற பணி அடுத்த ஆண்டு பிப்ரவரி/மார்ச் மாதத்தில் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல்லாவரம் தொகுதியில் திருநீர்மலை அருள்மிகு நீர்வண்ணப் பெருமாள் கோயிலுக்கு பழனி முருகன் கோயிலில் பக்தர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் கம்பிவட ஊர்தியைப்போல அமைத்துத்தர வேண்டும் என்று தொடர்ந்து கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வலியுறுத்தி வந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து, இன்றையதினம் இந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும் நேரில் ஆய்வு செய்து, கோயிலில் கம்பிவட ஊர்தி அமைக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். மேலும், திருநீர்மலை கோயிலுக்கு அமைச்சர் அவர்கள் வருகை தந்து ஆய்வு செய்தபோது கோயிலுக்கு அருகிலுள்ள அர்ச்சகர்களின் பழுதடைந்திருந்த வீடுகளைக் கட்ட உதவிட வேண்டும் என்று கோரியதையடுத்து,*

ரூபாய் 1 கோடியே 96 இலட்சத்திற்கு நிதியொதுக்கீடு செய்து, இப்போது அந்த வீடுகளெல்லாம் இடிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கவிருக்கின்றன. அதேநேரத்தில் திருக்கோயிலுக்கு மேலே செல்வதற்கு படிக்கட்டுகள் இருக்கின்றன. மழைக்காலத்திலும், வெயில் காலத்திலும் பக்தர்களுக்கு உதவிடும் வகையில் நிழற்குடை அமைக்க வேண்டும் என்று நினைத்திருந்தார்கள். ஆகவே, அதற்கு 36 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து அந்தப் பணிகளும் முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழகத்தில் 2021–2022 ஆம் ஆண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வி என்ன என்பதை மட்டும் கேளுங்கள்.

திரு. இ. கருணாநிதி: தமிழகத்தில் 2021–2022 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட கம்பிவட ஊர்திகள் எத்தனை அமைக்கப்படவுள்ளன? அவற்றின் நிலை, முன்னேற்றம் குறித்து தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 5 திருக்கோயில்களில் கம்பிவட ஊர்தி அமைக்க உத்தரவிட்டிருந்தார். திருத்தணியில் கம்பிவட ஊர்தி அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறு இல்லை என்பதால் மாற்று பாதை அமைக்கின்ற பணியை நம்முடைய வனத் துறையுடன் சேர்ந்து அதற்குண்டான சாத்தியக்கூறு ஆராயப்பட்டிருக்கின்றது. திருநீர்மலை, அதேபோல் திருக்கழுக்குன்றம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் rope car அமைக்கின்ற பணிக்கு tender கோரப்பட வேண்டிய நிலையில் தற்போது இருக்கின்றது. பழனியில் புதிதாக rope car அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, அதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்ற ஆய்வு அறிக்கை பெறப்பட்டிருக்கின்றது. அறிவித்த பணிகள் 5 என்றாலும்—அறிவிக்கப்படாத பணிகளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பழனி–இடும்பன் மலைக்கு ஒரு புதிய

2022 அக்டோபர் 19]

rope car என்றும், கோவை அனுவாவி ஆஞ்சநேய திருக்கோயிலுக்கு ஒரு புதிய rope car என்றும்—செயல்படுத்தப்போவது 7 பணிகள். சொன்னதையும் செய்வோம்; சொல்லாததையும் செய்வோம் என்பதற்கு இந்த rope car அமைக்கின்ற பணியே ஓர் எடுத்துக்காட்டு. அடுத்த ஆண்டு இறுதிக்குள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் அந்தப் பணிகள் அனைத்தையும் துவக்குகின்ற வகையில் பணிகள் வேகமாக, துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அர்ச்சகர் குடியிருப்பு குறித்து இங்கே குறிப்பிட்டார்; நிழற்குடை குறித்து குறிப்பிட்டார். இன்னும் 3 பணிகள், அதிகபட்சமாக அந்த திருநீர்மலைப் பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. குளியல் அறை மற்றும் குளத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் போன்ற பணிகளும் ரூ.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, கோசாலை என்று குறிப்பிட்டார்; பெயர் மாற்றப்பட்டுவிட்டது. பசு மட காப்பகம் என்று தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

முற்பகல் 11-05

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் தொகுதியில் மிகவும் ஏழையெளிய மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். அங்கே மாணவ மாணவிகள் அரசுப் பள்ளிகளில் படித்துவிட்டு மேல்படிப்பைத் தொடர, தனியார் கல்லூரிகளே மிக அதிகமாக அங்கு உள்ளதால், அங்கே கல்வி பெற முடியாமல் சிரமப்படுகிறார்கள். திருநீர்மலை ரங்கநாதப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமாக சர்வே எண் 73–லிருந்து 86 வரை 16.6 ஏக்கர் நிலம் உள்ளது. ஆகவே, அந்த மாணவச் செல்வங்கள் உயர் கல்வி மேற்கொள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை காலியான அந்த இடத்தில், தாம்பரம், ஸ்ரீபெரும்புதூர், ஆலந்தூர், பல்லாவரம்

ஆகிய நான்கு தொகுதிகளுக்கும் மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த ரங்கநாதப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான, அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள இடத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்ட 10 கோரிக்கைகளில் இதுவும் ஒன்றாக நினைத்து, இங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்படுமா என்பதையும், மேலும், ஜமீன் பல்லாவரம் சீனிவாச பெருமாள் கோயில், அஸ்தினாபுரம் பிரசன்ன ஆஞ்சநேயர் கோயில் ஆகிய திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஜமீன் பல்லாவரம் திருக்கோயில் தற்போது திருப்பணிக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேலும் அவர் கூறிய பிரசன்ன ஆஞ்சநேயர் திருக்கோயில் 1984 ஆம் ஆண்டு திருப்பணிக்குப் பிறகு, மீண்டும் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்தக் கோயிலும் கூடிய விரைவில் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வல்லுநர் குழு ஆய்வு அறிக்கையோடு உடனடியாக அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தோடு, 2021–2022 ஆம் ஆண்டு 10 கல்லூரிகளை அறிவிப்பு செய்தார். அதில் 4 கல்லூரிகள் தொடங்கப்பட்டுவிட்டன. மீதம் இருக்கின்ற 6 கல்லூரிகள் வந்துவிடக் கூடாது என்பதற்காக நல்மனம் கொண்டோர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இருந்தாலும், அதில் சட்டப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். நான்கு கல்லூரிகள் தொடங்குவதற்குத் தடை இல்லையென்று நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்று, தற்போது அந்த நான்கு கல்லூரிகளும் தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதம் இருக்கின்ற 6 கல்லூரிகளுக்கு நீண்ட, நெடிய சட்டப் போராட்டம் நடத்தி, நிச்சயம் அறிவிக்கப்பட்ட அந்த 10 கல்லூரிகளைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர்

2022 அக்டோபர் 19]

அவர்கள் முயற்சி செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது முடிந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சியில் மிகத் தொன்மை வாய்ந்த ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு, 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. அந்தக் கோயில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, சற்றொப்ப 15, 16 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. கோயிலின் மேற்கு கோபுரத்தில் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டிருப்பதை ஏற்கெனவே நான் கவன ஈர்ப்புமூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அவையின் மூலமாகக் கொண்டு சென்றிருக்கிறேன். எனவே, அதை திருப்பணியாக மேற்கொள்கிறபோது, அனைத்து பணிகளுமே சீரமைக்க வேண்டும். மேலும், அக்கோயிலில் அமைந்திருக்கக்கூடிய ஆயிரம்கால் மண்டபம் என்பது மிகவும் தொன்மை வாய்ந்தது. அதையும் சீரமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.*

சென்னையில் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துகள் அதிகம் இருக்கின்றன. நீண்டகாலம் தனியாரிடம் இருந்த பள்ளியை மீட்டெடுத்து, இன்றைக்கு அறநிலையத் துறையின் மூலமாக மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருவதற்கு அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், உத்தரவு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே கோயிலுக்குச் சொந்தமான சொத்துகள் காஞ்சியிலும் இருக்கின்றன. இதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டார். இருந்தாலும், அந்தச் சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, அதன் வாயிலாக, அரசு சார்பாக திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[2022 அக்டோபர் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏகாம்பரநாதர் திருக்கோயிலைப் பொறுத்தளவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்து, அங்கு நேரடியாகச் சென்று, இரண்டு முறை கள ஆய்வு செய்தோம். அந்தக் கோபுரம் மிகவும் பழமையானது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனதிலே வைத்து, ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களுக்கு எந்த ஆட்சியிலும் வழங்காத அளவிற்கு ரூ.100 கோடியை அரசின் சார்பாக இந்து சமய அறநிலையத் துறைக்கு முதன்முதலாக வழங்கிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். அதில், ரூ.17 கோடியை அந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணிக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம். வல்லுநர் குழுவிடமும் ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது; டெண்டரும் கோரப்பட்டுவிட்டது. இன்னும் ஒரு மாதகாலத்தில் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தைப் பொறுத்தவரையில், 901 கோடி ரூபாய் அளவிற்கு அந்தப் பகுதியில் மாத்திரம் நிலத்தை மீட்டிருக்கிறோம். கிட்டத்தட்ட, 91 ஏக்கர் நிலப்பரப்பை இதுவரையில் மீட்டிருக்கின்றோம். அந்த 6 கல்லூரிகளுக்கான சட்டப் போராட்டத்தில் அவர் கோரிய கல்லூரியும் ஒன்று. நிச்சயமாக, நீண்ட, நெடும் பயணமாக இருந்தாலும் அதில் பயணித்து, சட்டத்தின் கதவுகளைத் தட்டித் திறந்து வெற்றி பெற்று, நிச்சயம் அந்தக் கல்லூரி தொடங்குவதற்குண்டான அனைத்து பணிகளையும் மேற்கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]